**09.03.2026 <u>அசல் வழக்கு எண். 42/2016</u> Starting Time : 1.18 p.m.**

**<u>வா.சா.1</u> திரு. சக்ரபாணி த/பெ. கோவிந்தன்.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1).** தாவா பத்தி 3ல் பார்த்தசாரதி சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அதற்கு பதிவு ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அப்பாவிற்கு தான் தெரியும். அப்போது நான் சிறு வயதாக இருந்ததால் எனக்கு தெரியாது. பார்த்தசாரதி பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பார்த்தசாரதி பெயரில் உள்ள பட்டா எண் என்ன என்றால் தெரியாது.

**2).** பார்த்தசாரதி பெயரில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில், எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் **வா.த.சா.ஆ.1** ஆவணமான 1951 ஆவணத்தில் 46 சென்ட்டும், **வா.த.சா.ஆ.2** ஆவணமான 1954 ஆவணத்தில் 46 சென்ட்டும் ஆகும். இரண்டையும் கூட்டினால் 93 சென்ட் வருகிறது என்றும், ஆனால் நான் 1 ஏக்கர் 40-க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், மீதம் உள்ள சென்ட் எவ்வாறு வந்தது என்றால் அது பார்த்தசாரதியின் பாகம் ஆகும். மேலே உள்ள இரண்டு 46 சென்ட்டுகளும் அவருடைய குடும்பத்தார் பாகம் என்றால் அவரது தாயார் பாகம் ஆகும். 1951ல் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் குப்பம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். குப்பம்மாளுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் தெரியாது.

**3).** 25.01.1948ல் குப்பம்மாள் ஸ்ரீராம்நாயுடு என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து என்றால் எனக்கு தெரியாது. 1954ல் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் ஜனார்த்தனன் என்பவரிடமிருந்து பார்த்தசாரதி கிரயம் பெற்ற சொத்து ஆகும். ஜனார்த்தனன் என்பவருக்கு சொத்து எவ்வாறு வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு ஆவணங்களில் சொத்துக்களும் அவரது முன் விற்பனையாளர்கள் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்ற நிலையில், மேற்படி 93 சென்ட் சொத்துக்கள் பார்த்தசாரதியின் தாயார் பாகம் என்று எவ்வாறு சொல்கிறேன் என்றும், பார்த்தசாரதியின் தாயார் பாகம் என்று சொல்வதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**4).** எனது அப்பா பெயர் என்ன என்றால் கோவிந்த கவுண்டர். துர்கா அம்மாள் யார் என்றால் தெரியாது. அவர் பார்த்தசாரதியின் சொந்த தங்கை என்றால்

தெரியாது. தேவராஜ் தெரியுமா என்றால் தெரியாது. அவர் பார்த்தசாரதியின் சொந்த அண்ணன் என்றால் தெரியாது. வருவாய் ஆவணங்களில் பார்த்தசாரதி மற்றும் அவரது அண்ணன் தேவராஜ் பெயரில் கூட்டாக பட்டா இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டா எண்.488 என்பது தெரியுமா என்றால் தெரியும். 17.07.1964ல் துர்காம்மாள் 1/3 பாகத்தை கோவிலுக்கு எழுதி வைத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கோவிலின் தர்மகர்த்தா பெயருக்கு 46 3/4 சென்ட் நிலத்தை எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பெயரில் உள்ள பட்டா எண்.100 ஆகும்.

**5).** பார்த்தசாரதி மற்றும் அவரது அண்ணன் பெயரில் உள்ள கூட்டு பட்டா எண்.488 என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த காலத்திலும் பட்டா எண்.488 என் பெயரில் இல்லை என்றால் எனக்கு கொடுத்த பட்டா எண்.100ஆகும், பட்டா எண்.488 என் பெயரில் உள்ளதா இல்லையா என தெரியாது. சர்வே எண.106/2க்கான பட்டா எண் அப்போதும் இப்போதும் 488 தான் என்றால் என்னால் தெரியும் என்று சொல்ல முடியாது, தெரியாது என்றும் சொல்ல முடியாது. நான் 03.01.2014ல் என் பெயரில் பட்டா வாங்கினேன், அதற்கும் முன்பும், அதற்கு பின்பும் என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். 03.01.2014-க்கு பிறகு தான் நான் வரி செலுத்தி வந்தேன் என்றால் அதற்கு முன்பும் வரி செலுத்தி வந்தேன். அதற்கு முன்பு இருந்த பட்டா எண் என்ன என்றால் 488 தான். 488 பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா இல்லை. வரி ரசீது தான் உள்ளது.

**8ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Ending time : 1.43 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.